ஸ்ரீ:



*ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:*
*ஸ்ரீமதே ஸ்ரீ சடகோபாய நம:*
*ஸ்ரீமதே ஸ்ரீ ராமானுஜாய நம:*
*ஸ்ரீமதே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகாய நம:*
*ஸ்ரீமதே ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:*
*ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:*
*ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா சேவக*
*ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:*

# நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

# பெரிய திருவந்தாதி

## ஸ்ரீ அஹோபில மட தயாரிப்பு

*(May 2000)*

This version of 4000 Dhivya Prabhandham is prepared by a group of Sri Vaishnavas from Bahrain for Sri Ahobila Muth for easy recitation of the verses. Use of this MS-Word document for commercial purposes is prohibited. For more information contact Sri Venkat at rmvenkat@yahoo.com.

தனியன்:

முந்துற்ற நெஞ்சே! முயற்றி தரித்துரைத்து*
வந்தித்து வாயார வாழ்த்தி* -சந்த-
முருகூரும் சோலைசூழ் மொய்பூம் பொருநல்*
குருகூரன் மாறன் பேர் கூறு.

2585:##
முயற்றி சுமந்தெழுந்து* முந்துற்ற நெஞ்சே,*
இயற்றுவாய் எம்மொடுநீ கூடி,*-நயப்புடைய-
நாவீன் தொடைக்கிளவி* உள்பொதிவோம்,* நற்பூவைப்-
பூவீன்ற வண்ணன் புகழ். 1

2586:
புகழ்வோம் பழிப்போம்* புகழோம் பழியோம்*
இகழ்வோம் மதிப்போம்* மதியோம் இகழோம்* மற்று-
எங்கள் மால்! செங்கண் மால்!* சீறல்நீ, தீவினையோம்*
எங்கள் மால் கண்டாய் இவை. 2

2587:
இவையன்றே நல்ல* இவையன்றே தீய,*
இவை என்றிவை அறிவனேலும்,* -இவையெல்லாம்-
என்னால் அடைப்பு நீக்கி* ஒண்ணாது இறையவனே,*
என்னால் செயற் பாலது என்? 3

2588:
என்னின் மிகுபுகழார் யாவரே,* பின்னையும்மற்று-
எண்ணில்* மிகுபுகழேன் யானல்லால்,*-என்ன-
கருஞ்சோதி* கண்ணன் கடல்புரையும்,* சீலப்-
பெருஞ்சோதிக்கு என்னெஞ்சு ஆள்பெற்று? 4

2589:
பெற்றதாய் நீயே* பிறப்பித்த தந்தைநீ*
மற்றை யாராவாரும் நீபேசில்,* எற்றேயோ-
மாய! மாமாயவளை* மாயமுலை வாய்வைத்த*
நீயம்மா! காட்டும் நெறி. 5

2590:
நெறிகாட்டி நீக்குதியோ,* நின்பால் கருமா-
முறிமேனி காட்டுதியோ,* மேனாள் அறியோமை*
என்செய்வான் எண்ணினாய் கண்ணனே,* ஈதுரையாய்-
என்செய்தால் என்படோம் யாம்? 6

2591:
'யாமே அருவினையோம் சேயோம்,'* என் நெஞ்சினார்-
தாமே அணுக்கராய்ச் சார்ந்தொழிந்தார்,* -பூமேய-
செம்மாதை* நின் மார்வில் சேர்வித்து,* பாரிடந்த-
அம்மா! நின் பாதத் தருகு. 7

2592:
அருகும் சுவடும் தெரிவுணரோம்,* அன்பே-
பெருகும் மிகவிதுவென்? பேசீர்,* -பருகலாம்-
பண்புடையீர்! பாரளந்தீர்!* பாவியேம்கண் காண்பரிய*

நுண்புடையீர் நும்மை நுமக்கு. 8

2593:
'நுமக்கடியோம்' என்றென்று* நொந்துதுரைத்தென்,* மாலார்-
தமக்கு அவர்தாம்* சார்வரியர் ஆனல்?*-எமக்கினி-
யாதானும்* ஆகிடுகாண் நெஞ்சே,* அவர்த்திறத்தே-
யாதானும் சிந்தித் திரு. 9

2594:
இருநால்வர் ஈரைந்தின் மேலொருவர்,* எட்டோ-
டொருநால்வர்* ஓரிருவர் அல்லால்,* திருமாற்கு-
யாமார் வணக்கமார்* ஏபாவம் நன்னெஞ்சே*
நாமா மிகவுடையோம் நாழ்? 10

2595:
நாழால் அமர்முயன்ற* வல்லரக்கன், இன்னுயிரை,*
வாழா வகைவலிதல் நின்வலியே,*-ஆழாத-
பாரும்நீ வானும்நீ* காலும்நீ தீயும்நீ,*
நீரும் நீயாய் நின்ற நீ. 11

2596:
நீயன்றே ஆழ்துயரில்* வீழ்விப்பான் நின்றுழன்றாய்?*
போயொன்று சொல்லியென்? போநெஞ்சே,* -நீயென்றும்-
காழ்த்து உபதேசம் தரினும்* கைகொள்ளாய்,* கண்ணன் தாள்-
வாழ்த்துவதே கண்டாய் வழக்கு. 12

2597:
வழக்கொடு மாறுகொள் அன்று* அடியார் வேண்ட,*
இழக்கவும் காண்டும் இறைவ!-இழப்புண்டே,*
எம்மாட் கொண்டாகிலும்* யான்வேண்ட, என்கண்கள்*
தம்மால் காட்டுன் மேனிச் சாய்? 13

2598:
சாயால் கரியானை* உள்ளறியாராய் நெஞ்சே,*
பேயார் முலைகொடுத்தார் பேயராய்,*-நீயார்போய்த்-
தேம்பூண் சுவைத்து* ஊனறிந்தறிந்தும்,* தீவினையாம்-
பாம்பார்வாய்க் கைநீட்டல் பார்த்து. 14

2599:
பார்த்தோர் எதிரிதா நெஞ்சே,* படுதுயரம்-
பேர்த்தோதப்* பீடழிவாம் பேச்சில்லை,*-ஆர்த்தோதம்-
தம்மேனி* தாள்தடவத் தாம்கிடந்து,* தம்முடைய-
செம்மேனிக் கண்வளர்வார் சீர். 15

2600:
சீரால் பிறந்து* சிறப்பால் வளராது,*
பேர் வாமனாகாக்கால் பேராளா,*-மார்பாரப்-
புல்கி நீ உண்டுமிழ்ந்த* பூமி நீர் ஏற்பரிதே?*
சொல்லுநீ யாமறியச் சூழ்ந்து. 16

2601:
சூழ்ந்தடியார் வேண்டினக்கால்* தோன்றாது விட்டாலும்*
வாழ்ந்திடுவர் பின்னும்தம் வாய்திறவார்,*-சூழ்ந்தெங்கும்-

வாள்வரைகள் போலரக்கன்* வன்தலைகள் தாமிடிய,*
தாள்வரை வில்லேந்தினார் தாம். 17

2602:
தாம்பால் ஆப்புண்டாலும்* அத்தழும்பு தானிளக,*
பாம்பால் ஆப்புண்டு பாடுற்றாலும்,*-சோம்பாதுஇப்-
பல்லுருவை எல்லாம்* படர்வித்த வித்தா,* உன்-
தொல்லுருவை யாரறிவார் சொல்லு? 18

2603:
சொல்லில் குறையில்லை* சூதறியா நெஞ்சமே,*
எல்லி பகல் என்னாது எப்போதும்,*-தொல்லைக் கண்-
மாத்தானைக்கு எல்லாம்* ஓர் ஐவரையே மாறாக,*
காத்தானைக் காண்டும்நீ காண். 19

2604:
காணப் புகில்அறிவு* கைக்கொண்ட நல்நெஞ்சம்,*
நாணப் படுமன்றே நாம்பேசில்?*-மாணி-
உருவாகிக் கொண்டு* உலகம் நீரேற்ற சீரான்,*
திருவாகம் தீண்டிற்றுச் சென்று. 20

2605:
சென்றங்கு வெந்நரகில்* சேராமல் காப்பதற்கு,*
இன்றிங்கு என் நெஞ்சால் இடுக்குண்ட,*-அன்றங்குப்-
பாருருவும்* பார்வளைத்த நீருருவும்* கண்புதைய,-
காருருவன் தான் நிமிர்த்த கால் 21

2606:
காலே பொதத்திரிந்து* கத்துவராம் இனநாள்,*
மாலார் குடிபுகுந்தார் என்மனத்தே,* -மேலால்-
தருக்குமிடம் பாட்டினோடும்* வல்வினையார் தாம்,* வீற்-
றிருக்குமிடம் காணா திளைத்து. 22

2607:
இளைப்பாய் இளையாப்பாய்* நெஞ்சமே! சொன்னேன்,*
இளைக்க நமன்தமர்கள் பற்றி-இளைப்பெய்த*
நாய்தந்து மோதாமல்* நல்குவான் நல்காப்பான்,*
தாய்தந்தை எவ்வுயிர்க்கும் தான். 23

2608:
தானே தனித்தோன்றல்* தன்னளப்பு ஒன்றில்லாதான்*
தானே பிறர்கட்கும் தற்றோன்றல்,*-தானே-
இளைக்கிற்பார் கீழ்மேலாம்* மீண்டமைப்பான் ஆனால்,*
அளக்கிற்பார் பாரின் மேல் ஆர்? 24

2609:
ஆரானும் ஆதானும் செய்ய,* அகலிடத்தை-
ஆராய்ந்து* அது திருத்தல் ஆவதே?,*-சீரார்-
மனத்தலை* வன் துன்பத்தை மாற்றினேன்,* வானோர்-
இனத்தலைவன் கண்ணனால் யான். 25

2610:
யானும் என் நெஞ்சும் இசைந்தொழிந்தோம்,* வல்வினையைக்-

கானும் மலையும் புகக்கடிவான்,*-தானோர்-
இருளன்ன மாமேனி* எம்மிறையார் தந்த,*
அருளென்னும் தண்டால் அடித்து. 26

2611:
அடியால்* படிகடந்த முத்தோ,* அதன்றேல்-
முடியால்* விசும்பளந்த முத்தோ,*-நெடியாய்!-
செறிகழல்கள் தாள்நிமிர்த்துச்* சென்று உலகமெல்லாம்,*
அறிகிலமால் நீயளந்த அன்று. 27

2612:
அன்றே நம் கண்காணும்* ஆழியான் காருருவம்,*
இன்றேநாம் காணாது இருப்பதுவும்,*-என்றேனும்-
கட்கண்ணால்* காணாத அவ்வுருவை,* நெஞ்சென்னும்-
உட்கண்ணால் காணும் உணர்ந்து. 28

2613:
உணர ஒருவர்க்கு* எளியனே? செவ்வே,*
இணரும் துழாயலங்கல் எந்தை,*-உணரத்-
தனக்கெளியர்* எவ்வளவர் அவ்வளவன் ஆனால்,*
எனக்கெளியன் எம்பெருமான் இங்கு. 29

2614:
இங்கில்லை பண்டுபோல்* வீற்றிருத்தல்,* என்னுடைய-
செங்கண்மால் சீர்க்கும் சிறிதுள்ளம்,*-அங்கே-
மடியடக்கி நிற்பதனில்* வல்வினையார் தாம்,* மீண்டு-
அடியெடுப்பது அன்றே அழகு? 30

2615:
அழகு மறிவோமாய்* வல்வினையும் தீர்ப்பான்,*
நிழலும் அடிதோறும் ஆனோம்,*-சுழலக்-
குடங்கள்* தலை மீதெடுத்துக் கொண்டாடி,* அன்றத்-
தடங்கடலை மேயார் தமக்கு. 31

2616:
தமக்கடிமை வேண்டுவோர்* தாமோதரனார்,-
தமக்கு* அடிமை செய்யென்றால் செய்யாது,*-எமக்கென்று-
தாம்செய்யும் தீவினைக்கே* தாழ்வுறுவர் நெஞ்சினார்,*
யாம்செய்வது இவ்விடத்து இங்கியாது? 32

2617:
யாதானும் ஒன்றறியில்* தன்னுகக்கில் என்கொலோ,*
யாதானும் நேர்ந்து அணுகாவாறுதான்?,*-யாதானும்-
தேறுமா* செய்யா அசுரர்களை,* நேமியால்-
பாறு பாறாக்கினான் பால். 33

2618:
பாலாழி நீகிடக்கும் பண்பை,* யாம் கேட்டேயும்-
காலாழும்* நெஞ்சழியும் கண்சுழலும்,*-நீலாழிச்-
சோதியாய்! ஆதியாய்!* தொல்வினையெம் பால்கடியும்,*
நீதியாய்! நிற்சார்ந்து நின்று. 34

2619:

நின்றும் இருந்தும்* கிடந்தும் திரிதந்தும்,*
ஒன்றுமோ ஆற்ருன் என் நெஞ்சகலான்,*–அன்றங்கை–
வன்புடையால் பொன்பெயரோன்* வாய்தகர்த்து மார் விடந்தான்,*
அன்புடையன் அன்றே அவன்? 35

2620:
அவனும் இவனும் உவனும்,* மற்று உம்பர்–
அவனும்* அவன் என்று இராதே,*–அவனும்–
அவனே எனத்தெளிந்து* கண்ணனுக்கே தீர்ந்தால்,*
அவனே எவனேலும் ஆம். 36

2621:
ஆமாறு அறிவுடையார்* ஆவது அரிதன்றே?*
நாமே அதுவுடையோம் நன்னெஞ்சே,*–பூமேய்–
மதுகரமே* தண்துழாய் மாலாரை,* வாழ்த்தாம்–
அதுகரமே அன்பால் அமை. 37

2622:
அமைக்கும் பொழுதுண்டே* ஆராயில் நெஞ்சே,*
இமைக்கும் பொழுதும் இடைச்சி குமைத்திறங்கள்*
ஏசியே யாயினும்* ஈன்துழாய் மாயனையே,*
பேசியே போக்காய் பிழை. 38

2623:
பிழைக்க முயன்றோமோ* நெஞ்சமே! பேசாய்,*
தழைக்கும் துழாய் மார்வன் தன்னை,*–அழைத்தொருகால்–
போய் உபகாரம்* பொலியக் கொள்ளாது,* அவன் புகழே–
வாய் உபகாரம் கொண்ட வாய்ப்பு? 39

2624:
வாய்ப்போ இதுவொப்ப* மற்றில்லை வாநெஞ்சே,*
போய்ப்போய்* வெங்நரகில் பூவியேல்,*–தீப்பால–
பேய்த்தாய்* உயிர்க்களாய்ப் பாலுண்டு,* அவளுயிரை–
மாய்த்தானை வாழ்த்தே வலி. 40

2625:
'வலியம்' எனநினைந்து* வந்தெதிர்ந்த மல்லர்*
வலிய முடியிடிய வாங்கி,*–வலியநின்–
பொன்னாழிக் கையால்* புடைத்திடுதி கீளாதே,*
பன்னாளும் நிற்குமிப் பார். 41

2626:
பாருண்டான் பாருமிழ்ந்தான்* பாரிடந்தான் பாரளந்தான்*
பாரிடம் முன்படைத்தான் என்பரால்,*–பாரிடம்–
ஆவானும்* தானானல் ஆரிடமே?,* மற்றொருவர்க்கு–
ஆவான் புகாவால் அவை. 42

2627:
அவயம் எனநினைந்து* வந்தசுரர் பாலே,*
நவையை நளிர்விப்பான் தன்னை,*–கவையில்–
மனத்துயர வைத்திருந்து* வாழ்த்தாதார்க்கு உண்டோ,*
மனத்துயரை மாய்க்கும் வகை? 43

2628:
வகைசேர்ந்த நல்நெஞ்சும்* நாவுடைய வாயும்,*
மிகவாய்ந்து வீழா எனிலும்,*-மிகவாய்ந்து-
மாலைத்தாம்* வாழ்த்தாது இருப்பர் இதுவன்றே,*
மேலைத்தாம் செய்யும் வினை?                44

2629:
வினையார் தரமுயலும்* வெம்மையே அஞ்சி,*
தினையாம் சிறிதளவும் செல்ல நினையாது*
வாசகத்தால் ஏத்தினேன்* வானோர் தொழுதிறைஞ்சும்,*
நாயகத்தான் பொன்னடிகள் நான்.          45

2630:
நான்கூறும்* கூற்றுவது இத்தனையே,* நாணாளும்-
தேங்கோத நீருருவன் செங்கண்மால்,*-நீங்காத-
மாகதியாம்* வெந்நரகில் சேராமல் காப்பதற்கு,*
நீகதியா நெஞ்சே! நினை.            46

2631:
நினைத்திறைஞ்சி மானிடவர்* ஒன்றிரப்பர் என்றே,*
நினைத்திடவும் வேண்டாநீ நேரே,*-நினைத்திறைஞ்ச-
எவ்வளவர்* எவ்விடத்தோர் மாலே,* அதுதானும்-
எவ்வளவும் உண்டோ எமக்கு?                 47

2632:
எமக்கு யாம் விண்ணாட்டுக்கு* உச்சமதாம் வீட்டை,*
அமைத்திருந்தோம் அஃதன்றே யாமாறு,*-அமைப்பொலிந்த-
மென்தோளி காரணமா* வெங்கோட்டேறு ஏழுடனே,*
கொன்றானையே மனத்துக் கொண்டு?            48

2633:
கொண்டல்தான் மால்வரைதான்* மாகடல்தான் கூரிருள்தான்*
வண்டறுப் பூவைதான் மற்றுத்தான்,*-கண்டநாள்-
காருருவம்* காண்தோறும் நெஞ்சோடும்,* கண்ணனூர்-
பேருருவென்று எம்மைப் பிரிந்து.          49

2634:
பிரிந்தொன்று நோக்காது* தம்முடைய பின்னே,*
திரிந்துழலும் சிந்தனையார் தம்மை,*-புரிந்தொருகால்-
'ஆவா!' என இரங்கார்* அந்தோ! வலிதேகொல்,*
மாவாய் பிளந்தார் மனம்?            50

2635:
மனவாளும் ஓரைவர்* வன்குறும்பர் தம்மை,*
சினமாள்வித்து ஓரிடத்தே சேர்த்து*-புனமேய-
தண்துழாயான் அடியைத்* தான்காணும் அஃதன்றே,*
வண்துழாம் சீரார்க்கு மாண்பு?              51

2636:
மாண்பாவித்து அந்நான்று* மண்ணிரந்தான்,* மாயவள்நஞ்சு-
ஊண்பாவித்து உண்டான்* அது ஓருருவம்,*-காண்பான்நங்-
கண்ணவா* மற்றொன்று காணுறு,* சீர்பரவா-
துண்ணவாய் தானுறுமோ ஒன்று?          52

2637:
ஒன்றுண்டு செங்கண்மால்!* யானுரைப்பது,* உன்னடியார்க்கு-
என்செய்வன் என்றே இரித்திநீ,*-நின்புகழில்-
வைகும்* தம் சிந்தையிலும் மற்றினிதோ,* நீயவர்க்கு-
வைகுந்தம் என்றருளும் வான்? 53

2638:
வானே மறிகடலோ* மாருதமோ தீயகமோ,*
கானே ஒருங்கிற்றும் கண்டிலமால்,* ஆனீன்ற-
கன்றுயரத் தாமெறிந்து* காயுதிர்த்தார் தாள்பணிந்தோம்,*
வன்துயரை யாவா! மருங்கு. 54

2639:
மருங்கோத மோதும்* மணி நாகணையார்,*
மருங்கே வரவரியரேலும்,*-ஒருங்கே-
எமக்கவரைக் காணலாம்* எப்பொழுதும் உள்ளால்,*
மனக்கவலை தீர்ப்பார் வரவு. 55

2640:
வரவாறு ஒன்றில்லையால்* வாழ்வினிதால்,* எல்லே!-
ஒருவாறு ஒருவன் புகாவாறு,* -உருமாறும்-
ஆயவர்தாம் சேயவர்தாம்* அன்றுலகம் தாயவர்தாம்,*
மாயவர்தாம் காட்டும் வழி. 56

2641:
வழித்தங்கு வல்வினையை* மாற்றானோ நெஞ்சே,*
தழீஇக்கொண்டு போரவுணன் தன்னை,*-சுழித்தெங்கும்-
தாழ்விடங்கள் பற்றிப்* புலால்வெள்ளம் தானுகள,*
வாழ்வடங்க மார்விடந்த மால்? 57

2642:
மாலே! படிச்சோதி மாற்றேல்,* இனியுனது-
பாலேபோல்* சீரில் பழுத்தொழிந்தேன்,*-மேலால்-
பிறப்பின்மை பெற்று* அடிக்கீழ்க் குற்றேவல் அன்று,*
மறப்பின்மை யான்வேண்டும் மாடு. 58

2643:
மாடே வரப்பெறுவராம் என்றே,* வல்வினையார்-
காடானும் ஆதானும் கைகொள்ளார்,*-ஊடேபோய்ப்-
போரோதம் சிந்து* திரைக் கண்வளரும்,* பேராளன்-
பேரோதச் சிந்திக்கப் பேர்ந்து. 59

2644:
பேர்ந்தொன்று நோக்காது* பின்னிற்பாய் நில்லாப்பாய்*
ஈன்துழாய் மாயனையே என்னெஞ்சே,*-பேர்ந்தெங்கும்-
தொல்லைமா வெந்நரகில்* சேராமல் காப்பதற்கு*
இல்லைகாண் மற்றோர் இறை. 60

2645:
இறைமுறையான் சேவடிமேல்* மண்ணளந்த அந்நாள்,*
மறைமுறையால் வானாடர் கூடி,*-முறைமுறையின்-
தாதிலகு* பூத்தெளித்தால் ஒவ்வாதே,* தாழ்விசும்பின்-

மீதிலகித் தான்கிடக்கும் மீன்.    61

2646:
மீனென்னும் கம்பில்* வெறியென்னும் வெள்ளிவேய்*
வானென்னும் கேடிலா வான்குடைக்கு,*-தானோர்-
மணிக்காம்பு போல்* நிமிர்ந்து மண்ணளந்தான்,* நங்கள்-
பிணிக்காம் பெருமருந்து பின்.    62

2647:
பின்துரக்கும் காற்றிழந்த* சூல்கொண்டல் பேர்ந்தும் போய்,*
வன்திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்தே,*-அன்று-
திருச்செய்ய நேமியான்* தீயரக்கி மூக்கும்,*
பருச்செவியும் ஈர்ந்த பரன்.    63

2648:
பரனும் அவனுதல்* பாவிப்பர் ஆகில்,*
உரனுல் ஒருமூன்று போதும்,*-மரமேழன்று-
எய்தானைப்* புள்ளின்வாய் கீண்டானையே,* அமரர்-
கைதான் தொழாவே கலந்து?    64

2649:
கலந்து நலியும்* கடுந்துயரை நெஞ்சே*
மலங்க அடித்து மடிப்பான்,*-விலங்கல்போல்-
தொல்மாலைக் கேசவனை* நாரணனை மாதவனை,*
சொல்மாலை எப்பொழுதும் சூட்டு.    65

2650:
சூட்டாய நேமியான்* தொல்லரக்கன் இன்னுயிரை,*
மாட்டே துயரிழைத்த மாயவனை,*-ஈட்ட-
வெறிகொண்ட* தண்துழாய் வேதியனை,* நெஞ்சே!-
அறிகண்டாய் சொன்னேன் அது.    66

2651:
அதுவோ நன்றென்று* அங்கு அமருலகோ வேண்டில்,*
அதுவோ பொருளில்லை அன்றே?,*-அதுவொழிந்து-
மண் இன்று* ஆள்வேன் எனிலும் கூடும் மடநெஞ்சே,*
கண்ணன் தாள் வாழ்த்துவதே கல்.    67

2652:
கல்லும் கனைகடலும்* வைகுந்த வானுடும்,*
புல்லென்று அழிந்தனகொல் ஏபாவம்,*-வெல்ல-
நெடியான் நிறங்கரியான்* உள்புகுந்து நீங்கான்,*
அடியேனது உள்ளத்து அகம்.    68

2653:
அகம்சிவந்த கண்ணினராய்* வல்வினையர் ஆவார்,*
முகம்சிதைவர் ஆமன்றே முக்கி,*-மிகுந்திருமால்-
சீர்க்கடலை உள்பொதிந்த* சிந்தனையேன் தன்னை,*
ஆர்க்கடலாம் செவ்வே அடர்த்து?    69

2654:
அடர்ப்பொன் முடியானை* ஆயிரம் பேரானை,*
சுடர்கொள் சுடராழி யானை,*-இடர்கடியும்-

மாதா பிதுவாக* வைத்தேன் எனதுள்ளே*
யாதாகில் யாதே இனி? 70

2655:
இனிநின்று நின்பெருமை* யானுரைப்பது என்னே,*
தனிநின்ற சார்விலா மூர்த்தி,*-பனிநீர்-
அகத்துலவு* செஞ்சடையான் ஆகத்தான்,* நான்கு-
முகத்தான் நின்உந்தி முதல். 71

2656:
முதலாம் திருவுருவம் மூன்றென்பர்,* ஒன்றே-
முதலாகும்* மூன்றுக்கும் என்பர்*-முதல்வா,-
நிகரிலகு காருருவா!* நின்னகத்தது அன்றே,*
புகரிலகு தாமரையின் பூ? 72

2657:
பூவையும் காயாவும்* நீலமும் பூக்கின்ற,*
காவி மலரென்றும் காண்தோறும்,*-பாவியேன்-
மெல்லாவி* மெய்மிகவே பூரிக்கும்,* அவ்வவை-
எல்லாம் பிரானுருவே என்று. 73

2658:
என்றும் ஒருநாள்* ஒழியாமை யானிரந்தால்,*
ஒன்றும் இரங்கார் உருக்காட்டார்,*-குன்று-
குடையாக* ஆகாத்த கோவலனுர்,* நெஞ்சே!-
புடைதான் பெரிதே புவி. 74

2659:
புவியும் இருவிசும்பும் நினகத்த,* நீயென்-
செவியின் வழிபுகுந்து* என்னுள்ளாய்,*-அவிவின்றி-
யான்பெரியன் நீபெரியை* என்பதனை யாரறிவார்,*
ஊன்பருகு நேமியாய்! உள்ளு. 75

2660:
உள்ளிலும் உள்ளந் தடிக்கும்* வினைப்படலம்,*
விள்ள விழித்துன்னை மெய்யுற்றல்,*-உள்ள-
உலகளவு யானும்* உளனுவன் என்கொலோ*
உலகளந்த மூர்த்தி! உரை. 76

2661:
உரைக்கிலோர் சுற்றத்தார்* உற்றார் என்றாரே,*
இரைக்கும் கடற்கிடந்த எந்தாய்,*-உரைப்பெல்லாம்,-
நின்னன்றி* மற்றிலேன் கண்டாய்,* எனதுயிர்க்கோர்-
சொல்நன்றி ஆகும் துணை. 77

2662:
துணைநாள் பெருங்கிளையும்* தொல்குலமும்,* சுற்றத்-
திணைநாளும் இன்புடைத்தா மேலும்,* கணைநாணில்-
ஓவாத் தொழில்சார்ங்கன்* தொல்சீரை நன்னெஞ்சே,*
ஓவாத ஊணாக உண். 78

2663:
உள்நாட்டுத் தேசன்றே!* ஊழ்வினையை அஞ்சுமே,*

விண்ணாட்டை ஒன்றாக மெச்சுமே,*-மண்ணாட்டில்-
ஆராகி* எவ்விழிவு இற்றாலும்,* ஆழியங்கைப்-
பேராயற்கு ஆளாம் பிறப்பு? 79

2664:
பிறப்பு இறப்பு மூப்புப்* பிணிதுறந்து,* பின்னும்-
இறக்கவும் இன்புடைத்தா மேலும்,*-மறப்பெல்லாம்-
ஏதமே* என்றல்லால் எண்ணுவனே,* மண்ணளந்தான்-
பாதமே ஏத்தாப் பகல்? 80

2665:
பகலிரா என்பதுவும்* பாவியாது,* எம்மை-
இகல்செய்து இருபொழுதும் ஆள்வர்,*-தகவாத்-
'தொழும்பர் இவர்; சீர்க்கும்* துணையிலர்' என்றோரார்,*
செழும்பரவை மேயார் தெரிந்து. 81

2666:
தெரிந்துணர்வு ஒன்றின்மையால்* தீவினையேன்,* வாளா-
இருந்தொழிந்தேன்* கீழ்நாள்கள் எல்லாம்,*-கரந்துருவில்-
அம்மானை* அந்நான்று பின்தொடர்ந்த* ஆழியங்கை-
அம்மானை ஏத்தாது அயர்ந்து. 82

2667:
அயர்ப்பாய் அயராப்பாய்* நெஞ்சமே! சொன்னேன்*
உயப்போம் நெறியிதுவே கண்டாய்,*-செயற்பால-
அல்லவே செய்கிறுதி* நெஞ்சமே! அஞ்சினேன்*
மல்லர்நாள் வவ்வினனை வாழ்த்து. 83

2668:
வாழ்த்தி அவனடியைப்* பூப்புனைந்து,* நின்தலையைத்-
தாழ்த்து* இருகை கூப்பென்றால் கூப்பாது பாழ்த்தவிதி*
எங்குற்றாய் என்றவனை* ஏத்தாதென் நெஞ்சமே,*
தங்கத்தானாமேலும் தங்கு. 84

2669:
தங்கா முயற்றியவாய்த்* தாழ்விசும்பின் மீதுபாய்ந்து,*
எங்கே புக்கு எத்தவம் செய்திட்டன கொல்,*-பொங்கோதத்-
தண்ணம்பால்* வேலைவாய்க் கண்வளரும்,* என்னுடைய-
கண்ணன்பால் நல்நிறங்கொள் கார்? 85

2670:##
கார்கலந்த மேனியான்* கைகலந்த ஆழியான்,*
பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான்,*-சீர்கலந்த-
சொல்நினைந்து போக்காரேல்* சூழ்வினையின் ஆழ்துயரை,*
என்நினைந்து போக்குவர் இப்போது? 86

2671:##
இப்போதும் இன்னும்* இனிச்சிறிது நின்றாலும்*
எப்போதும் ஈதேசொல் என்னெஞ்சே*-எப்போதும்-
கைகழலா நேமியான்* நம்மேல் வினைகடிவான்*
மொய்கழலே ஏத்த முயல். 87

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்